# மே – 3 – வியாழன்

## திருச்சீடர்கள் புனித பிலிப் புனித யாகப்பர்

**"நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கைகொள்பவரும் செய்வார்." - யோவான் 14:12**

## முதல் வாசகம் :1கொரிந்தியர் 15 : 1–8

சகோதர சகோதரிகளே, உங்களுக்கு நான் அறிவித்த நற்செய்தியை நினைவுறுத்த விழைகிறேன். அதை நீங்களும் ஏற்றுக் கொண்டீர்கள் அதிலே நிலைத்தும் நிற்கிறீர்கள். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியை நீங்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தால் அதன்வழியாக மீட்பு அடைவீர்கள் இல்லையேல் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பொருளற்றதே. நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக்கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கேபாவுக்கும் அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர் சகோதரிகளுக்கு ஒரேநேரத்தில் தோன்றினார். அவர்களுள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றனர் சிலர் இறந்து விட்டனர். பிறகு யாக்கோபுக்கும் அதன்பின் திருத்தூதர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார்.

**பதில்பாடல் :** படைப்புக்களின் அறிக்கை உலகெங்கும் சென்றடைகிறது

## நற்செய்தி : யோவான் 14 : 6 - 14

அக்காலத்தில் இயேசு தோமாவை நோக்கி, "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை."நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டுமிருக்கிறீர்கள்" என்றார். அப்போது பிலிப்பு, அவரிடம், "ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக்காட்டும் அதுவே போதும்" என்றார்.இயேசு அவரிடம் கூறியது "பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்துகொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். அப்படியிருக்க, "தந்தையை எங்களுக்குக் காட்டும்" என்று நீ எப்படிக் கேட்கலாம்?நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்துகொண்டு செயலாற்றுபவர் தந்தையே.நான் தந்தையுள் இருக்கிறேன் தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள் என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால் என்செயல்களின் பொருட்டாவது நம்புங்கள்.நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார் ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார். ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார்.நீங்கள் என் பெயரால் எதை கேட்டாலும் செய்வேன்" என்றார்.

**தியானம்:** இன்று புனிதசீடர்கள் யாகப்பரையும், பிலிப்பையும் நினைவு கூருகின்றோம். இவ்விருசீடர்களும் "நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார்" என்ற இயேசுவின் உறுதி மொழிக்கிணங்க நற்செய்திக்குச் சாட்சிகளாக வாழ்ந்துள்ளனர். மீட்பர் இயேசுவினூடாக எமது பரலோகதகப்னோடு நெருக்கமான உறவுவைப்பது இவ்வுலகில் கிறிஸ்தவனாகப் பிறந்துள்ள ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள இலவச கொடையாகும் என்பதனை நற்செய்தி உறுதிசெய்கிறது. எமது இரட்சகர் இயேசு, பரலோக தந்தையுடன் தமக்குள்ள நெருக்கமான உறவு போன்று எமக்கும் நெருக்கமான உறவு இருக்கவேண்டுமென விரும்புகின்றார். கிறிஸ்துவின் சக்திமிக்க இவ்வாசகங்கள் சாதாரன கிறிஸ்தவர்களான எமது உங்களிலும் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் உண்டாக்கமுடியாதா? பரிசுத்த ஆவியானவரது இலவசக் கொடையினை நாங்கள் ஒவ்வொருவரும் பெற்றுள்ள திருவருட்சாதனங்கள் வழியாக எல்லாம் வல்ல இறைவன் எமக்கு வழங்கியுள்ளார். எனினும் பாவியான நானுமா? என்ற வினாவிற்கு "என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்" என நற்செய்தியில் இறைமகன் இயேசு பதில் தருகின்றார். இறைமகன் இயேசுவின் வல்லமையில் நம்பிக்கை கொண்டு அவரை எனது சொந்த இரட்சகராக (மீட்பராக) ஏற்று எனது பழைய பாவப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட நான் ஏன் தயங்கவேண்டும்? ஏனெனில் கிறிஸ்து , யேசு தனது சீடர்களைத் தெரிவு செய்த போது அவர்களைத் தொழில், படிப்பு, அந்தஸ்து எனத் தகுதிகளை அடிப்படையாக முன்வைக்கவில்லை. மாறாக, சாதாரன வாழ்க்கை வாழ்ந்தவர்களையே தமது சீடர்களாகப் "பின்செல்"லுமாறு அழைத்தார். அச்சீடர்களும் கிறிஸ்துவைப் பின்பற்றியது மட்டுமல்ல தமது உயிரையும் கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்துள்ளார்கள் என்பதற்கு இன்று நாம் நினைவுகூரும் இரு புனிதசீடர்களும் சாட்சியம் கூறுகின்றனர். திருமுழுக்கு அருட்சாதனங்கள் வழியாக நாமும் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழவும், எம்மை நாமே ஆராய்ந்துபார்க்கவும் இன்றைய நற்செய்தி எம்மைஅழைக்கின்றது. இதுவே இவ்வுலகில் நாம் செய்யக்கூடிய "அரும் பெரும் செயல்" என புதிய உத்தானமாக புது வாழ்வாக எம்மில் மாற்றம் பெறட்டும். இரக்கத்தின் அரசரே! உமக்கெதிராய்ப் பாவம் புரிந்தேன் உலக ஆசையில் மூழ்கினேன் உம்மை விட்டுவிலகிப் போனேன் இந்த வேளையில் என்னைமன்னியும் - ஆமென்.